# இலங்கையில் காணப்படும் விஷமுள்ள தாவரங்கள்

**தேசிய நச்சுத் தகவல் மையம்**
**இலங்கை தேசிய வைத்தியசாலை**
**கொழும்பு**

தாவரங்கள் சுற்றுச்சூழலில் மிக முக்கியமானதொரு பகுதியாகக் காணப்படுகின்றது. சில தாவரங்கள் உண்ணக்கூடியவை, காட்டுத்தாவரங்கள், மருத்துவ மற்றும் அலங்கார தாவரங்களாகும். சில தாவரங்கள் விஷமாக இருக்கலாம். தற்செயலாக உட்கொண்ட பின்னர் சிறுவர்களிடையே ஏற்படும் தாவர நஞ்சூட்டல் பொதுவானதாகும். எவ்வாறாயினும், தாவர நஞ்சூட்டல் மூலம் ஏற்படும் இறப்புகள் அரிதானவை.

## ஆமணக்கு எண்ணெய்த் தாவரம் *Ricinus communis*




விஷமுள்ள பகுதி : விதைகள்

நச்சு : டோக்சல்புமின் -ரிசின்

## காட்டு ஆமணக்கு - *Jatropha curcas-*




பழம் - நீள்வட்ட வடிவமானது அரிதாகவே மடல் உடையது மற்றும் பழுக்கும்போது கருப்பு விதைகளைக் கொண்டிருக்கும்.

விஷமுள்ள பாகங்கள் - விதைகள்

நச்சு - கர்சின் விதைகளில் அதிகபட்ச செறிவுடன் தாவரம் முழுவதும் காணப்படுகின்றது.

## தண்ணிக் கீரை - *Adenia hondala*




பழங்கள் மற்றும் இலைகள் தோற்றத்தில் கொடித்தோடைப் பழத்தை ஒத்திருக்கும். எனவே சிறுவர்கள் மத்தியில் தற்செயலான நஞ்சூட்டலுக்குப் பொறுப்பாகவுள்ளது.

**விஷமுள்ள பாகங்கள்:** பழங்கள் மற்றும் இலைகள்

நச்சுக்கள்: சயனோஜெனிக் கிளைகோசைடு மற்றும் டோக்சல்புமின்

## காந்தள் - *Gloriosa superba*




வண்ணமயமான பூ குறிப்பிடத்தக்க அம்சமாகும். கிழங்குகள் ‘L' வடிவானவை, அவற்றை ஹுலங்கிரியா கிழங்குகளிலிருந்து வேறுபடுத்தி அறிய முடியும்.

**விஷமுள்ள பாகங்கள்:** தாவரத்தின் அனைத்துப் பாகங்களும் விஷமானவை. அதிக நச்சுத்தன்மையானது கிழங்கு வேர்த்தண்டுகளில் உள்ளது.

**நச்சு-** ஆல்கொலாய்டு- கொல்கிசின்

## குண்டுமணி - *Abrus precatorius*





விதைகள் குழிவில் கரும்புள்ளிகளுடன் கடும் சிவப்பு அல்லது நல்ல சிவப்பு நிறத்தில் இருக்கும்.

**விஷமுள்ள பாகங்கள்:** விதைகள்

**நச்சு** : அப்ரின் (கிளைகோபுரோட்டீன்), அப்ரிக் அமிலம் ( கிளைகோசைட்)

## மலை ஆமணக்கு -*Jatropha multifida*



காயங்களுக்கு மற்றும் புண்களுக்கு செடியின் மரப்பால் பயன்படுத்தப்படுவதினால் அலங்காரத் தாவரமானது 'கபும்கிரியா' என அழைக்கப்படுகின்றது.

**விஷப் பாகங்கள்:** பழங்கள் மற்றும் முழுத் தாவரத்தின் மரப்பால்.

**நச்சு-** டோக்சல்புமின்- கர்சின்

## நந்தியாவட்டம் - *Cerbera manghas*





பழம் பச்சை நிறம். நீள்வட்ட வடிவானது. பழுத்தவுடன் இளஞ்சிவப்பு அல்லது மஞ்சள் நிறமாக மாறும். பழம் ஒரு மாம்பழத்தை ஒத்தது மற்றும் நார்ச்சத்துள்ள நெற்றை உடையது.

**நச்சுப் பாகங்கள்:** தாவரத்தின் அனைத்து பகுதிகளும் நச்சுத்தன்மை வாய்ந்தவை மற்றும் பழங்கள் அதிக நச்சுத்தன்மைக் கொண்டவை.

**நச்சுக்கள்-** கிளைகோசைடுகள் (செர்பெரின், ஓடோலம் மற்றும் தெவெடின்)

## நந்தியாவட்டம் - *Pagiantha dichotoma*





பழங்கள் தொங்கக்கூடியதோடு வழமையாக ஜோடியாகவும் ஆப்பு வடிவிலும் காணப்படும். பழுத்தவுடன் மஞ்சள்- ஆரஞ்சு நிறத்தில் இருக்கும். கூழ் போன்ற மஞ்சள் கரு அடர் சிவப்பு நிறத்திலிருக்கும் விதைகள் அதில் பதிக்கப்பட்டிருக்கும்.

**நச்சுப்பாகங்கள்:** பழங்கள்.

**நச்சு:** நச்சுஆல்கலாய்டு "அட்ரோபின்"

## மஞ்சள்அரளி - *Thevetia peruviana*





**மலர்கள்:** முக்கியமானவை. மஞ்சள் நிறமானவை. பழம் முதிர்ச்சியடையாதபோது பச்சை நிறமாகவும், முதிர்ந்தவுடன் மஞ்சள் முதல் கருப்பு நிறமாகவும் மூன்று முகடுகளுடன் இருக்கும். ஒரு பழத்தில் பலவிதைகளைக் காணலாம்.

**நச்சுப் பாகங்கள்:** தாவரத்தின் அனைத்து பகுதிகளும் நச்சுத் தன்மை வாய்ந்தவை, பழங்கள் அதிக நச்சுத்தன்மைக் கொண்டவை.

**நச்சு-** கார்டியாக்கிளைகோசைட்ஸ் ( தெவெடின் ஏ மற்றும் தெவெடின் பி)

## ஊமத்தை - ***Datura metel***





பழங்கள் நீள்வட்ட அல்லது வட்ட வடிவில், முட்கள் நிறைந்த வெளிர் பச்சை நிறத்திலிருக்கும். பூ 'எக்காளம்' வடிவ வெள்ளை அல்லது வெளிர் ஊதா நிறத்திலிருக்கும். விதைகள் கபில நிறத்திலிருக்கும்.

**நச்சுப் பாகங்கள்:** விதைகள்.

**நச்சு :** ட்ரோபேன் ஆல்கலாய்ட்ஸ் (பெல்லடோனா ஆல்கலாய்ட்ஸ்) – அட்ரோபின்.

## எட்டி - *Strychnos nux vomica*





பழம் பச்சை நிறம். வட்ட வடிவில் இருக்கும். பழுத்தவுடன் மென்மையான ஆரஞ்சு நிறமாக மாறும். விதைகள் ஒரு பக்கம் குழிவானதாகவும் மறுபக்கம் குவிவானதாகவும் பச்சை கலந்த சாம்பல் நிறத்திலிருக்கும்.

**நச்சுப் பாகங்கள்:** விதைகள்

**நச்சு :** அதிக நச்சு ஆல்கலாய்ட்ஸ்-ஸ்ராசின், புரூசின் மற்றும் லோகனின்.

## பெருஞ்சேம்பு - *Alocasia macrorrhiza*




பொதுவாக அனைத்து கிராம புறத்தோட்டங்களிலும் காணப்படும்.

**நச்சுப் பாகங்கள்:** தண்டுகள், இலைகள், இலைக் காம்புகள், பச்சையான கிழங்குகள்

**நச்சு :** கால்சியம் ஆக்சலேட் படிகங்கள் மற்றும் அடையாளம் காணப்படாத ஆவியாகும் கலவைகள், அதிக எரிச்சல் மற்றும் அரிப்பை ஏற்படுத்தும்.

## முதலுதவிகள்:

### உட்கொள்ளுதல்:

- நோயாளியின் அச்சத்தை நீக்கவும்.
- தேங்காய்ப்பால், உப்புநீர் அல்லது ஏதேனும் ஏனைய திரவத்தைப் பயன்படுத்தி வாந்தி எடுக்க தூண்ட வேண்டாம்.
- நோயாளி உறக்க நிலையில் அல்லது சுயநினைவின்றி இருந்தால், நாடியை உயர்த்தி இடது பக்கவாட்டில் வைத்திருக்கவும்.
- நோயாளியை உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவும்.
- முடியுமானால், அடையாளம் காண்பதற்கு தாவரத்தின் பகுதியொன்றை எடுத்துச் செல்லவும்.

### கண் வெளிப்பாடு:

- குறைந்தது15-20 நிமிடங்களுக்கு குளிர்ந்த ஓடும் நீரில் கண்ணை நன்றாகக் கழுவவும்.
- கண்களுக்கு ஏதேனும் மருந்து அல்லது எண்ணெய் பொருட்களைப் பூச வேண்டாம்.

### தோல் வெளிப்பாடு :

- பாதிக்கப்பட்ட பகுதியை சவர்க்காரமிட்டு நீரினால் நன்றாகக் கழுவவும்.

### செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை

- தாவரங்கள், விதைகள், பழங்கள் ஆகியவற்றை குழந்தைகளுக்கு எட்டாதவாறு களஞ்சியப்படுத்தி வைக்கவும்.
- உங்கள் தோட்டம் மற்றும் வீட்டிலிருந்து நச்சுத்தன்மை வாய்ந்த தாவரங்களை அகற்றவும்.
- தாவரத்தின் எந்தவொரு பாகங்களையும் வாயில் போடக்கூடாது என்பதை குழந்தைகளுக்கு கற்றுக்கொடுங்கள்.
- குழந்தைகளுக்கு பூக்களிலிருந்து தேன் உறிஞ்சுவதற்கு அனுமதிக்க வேண்டாம்.
- காட்டுத் தாவரங்களை குறிப்பாக அறியப்படாத காளான்களை உண்ண வேண்டாம்.
- அறியப்படாத தாவரங்களிலிருந்து வீட்டில் தயாரிக்கும் மருந்துகளை தயாரிக்க வேண்டாம்.


**பின்வருவனவற்றின் மூலம் எம்மைத் தொடர்பு கொள்ளவும்;**

**தொ.பே:** 011-2686143/ 011-2691111

**வி.தொ.** 2430

**மின்னஞ்சல்:** npdic.nhs@gmail.com

infotoxlanka@gmail.com

https://www.facebook.com/ NTPICSL

**இணையத்தளம்** http://www.toxbaselanka.info



**சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் தேசிய நச்சுத் தகவல் மையத்தினால் வெளியிடப்பட்டது.**